**கவனிக்க.-** *2015.09.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியில் பகுதி VI இல் குருநாகல் மற்றும் குளியாப்பிட்டி நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகிறது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1932 - 2015 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2015.09.11

*1932 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1425 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1430 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1424 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை – 2016

2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2015.09.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளு குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக கடித உறையொன்றில் இட்டு முத்திரையிடப்பட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2015.09.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

5. எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2015.11.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

7. இக்குத்தகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற பணத்தொகையில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

எச். எம். எல். எஸ். ஹேரத்,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2015, ஒகத்து 20.

### அட்டவணை

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27 – தாகொந்த | திவுலப்பிட்டிய | தாகொந்த | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000 | 2015.09.23<br>முற்பகல் 10.30 |

9-165

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டெவா டெவெலப்பியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 105017
*பதிவு முகவரி* : இல. 13/1, ஸ்ரீ சரணங்கர வீதி, களுபோவில, தெஹிவளை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். ரீ. பீ. பிசினெஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 324/1ஏ, காலி வீதி,
கொழும்பு 3.

9-173

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வசந்த பேக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 105799
*பதிவு முகவரி* : இல. 7/5, தபோதனராம வீதி, காலி வீதி, கல்கிசை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். ரீ. பீ. பிசினெஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

9-174

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : செப்றொன் டெலிகொம் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 106619
*பதிவு முகவரி* : 10 ஆம் மட்டம், செலின்கோ ஹவுஸ், இல. 69, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1, இலங்கை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். ரீ. பீ. பிசினெஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 324/1ஏ, காலி வீதி,
கொழும்பு 3.

9-175

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எவியன் ட்ரவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 105594
*பதிவு அலுவலகம்* : இல. 421, குணரத்ன மாவத்தை, மாக்கோல வடக்கு, மாக்கோல

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். ரீ. பீ. பிசினெஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

9-176

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : தினுல இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 107090
*பதிவு முகவரி* : இல. 295/6, சமகி பெதெச, ஹோக்கந்த கிழக்கு, ஹோக்கந்தர

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எச். ரீ. பீ. பிசினெஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 324/1ஏ, காலி வீதி,
கொழும்பு 3.

9-177

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பிலிப்ஸ் லைட்டிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 107307
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 24.07.2015
பதிவு முகவரி : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-234

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அல் ஹுதா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 107494
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 14.08.2015
பதிவு முகவரி : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-235

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியான வோடர்ஸ்போட் அன்ட் மோ (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : வோடர்ஸ்போட் அன்ட் மோ (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 107488
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015.08.03
பதிவு அலுவலகம் : இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10

கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-236

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கன்சய் பெயின்ட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 107458
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 30.07.2015
பதிவுசெய்யப்பட்ட திகதி : இல. 146, டவ்சன் வீதி, கொழும்பு 2

பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

9-230

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கொழும்பு 3, வாலுக்காராம வீதி, 67 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பீவீ 107764 எனும் பதிவிலக்கமுடைய போரிச்சி (பீவீரீ) எல்ரீடீ என்ற நிறுவனம் 2015.08.14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

போரிச்சி (பீவீரீ) எல்ரீடீ,
கம்பனிச் செயலாளர்.

9-172

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பிஸ்னெஸ் மெனேஜ்மென்ட் சொலூஷன்ஸ் அன்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது 2015, ஓகத்து 10 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பிஸ்னெஸ் மெனேஜ்மென்ட் சொலூஷன்ஸ் அன்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 107624
பதிவு அலுவலகம் : இல. 2சீ, ஹில்டா பிளேஸ், தெஹிவளை

கூட்டிணைப்புத் திகதி : 2015.08.10

எஸ். லோகநாதன்,
கம்பனிச் செயலாளர்.

இல. 2சீ, ஹில்டா பிளேஸ்,
தெஹிவளை.

9-152

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 34 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கன்ஸ்ரக்ஷன் இன்டஸ்ட்ரீஸ் ஸ்கில்ஸ் கவுன்சில் ஆனது 2015.08.19 ஆந் திகதியன்று உத்தரவாதத்தில் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இது ஜீஏ 3066 எனும் பதிவிலக்கத்தினைக் கொண்டிருப்பதுடன் அதனது அலுவலகமானது "இதிகிரீம் மெதுர", இல. 350ஏ, பன்னிப்பிட்டி வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரியில் அமைந்துள்ளது.

கன்ஸ்ட்ரக்ஷன் இன்டஸ்ட்ரி ஸ்கில்ஸ் கவுன்சில்,
கம்பனிச் செயலாளர்,

9-271

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஆர். என். ரீ. என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதவிலக்கம்* : பீவீ 106163
*கூட்டிணைப்புத் திகதி* : 09.06.2015
*புதிய முகவரி* : இல. 162/1, கொஸ்வத்த வீதி, நாவல வீதி, ராஜகிரிய

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-282

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஏ அன்ட் டி லாப்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 99244
*கூட்டிணைப்புத் திகதி* :
*பதிவு முகவரி* : இல. 285/3, கல்விஹார வீதி, தெகிவளை

பணிப்பாளர்.

9-158

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : இன்லீட் கொலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 231, தெபானம, பன்னிப்பிட்டிய
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 99808
*கூட்டிணைப்புத் திகதி* : 18.07.2014

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

9-121

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : என்ட்லர் இன்க் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 107116
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015, யூலை 17
*கம்பனியின் பதிவு அலுவலகத்தின் முகவரி* : இல. 170, மடபாத்த வீதி, பிலியந்தலை

சீ. எச். செனவிரத்ன,
கம்பனிச் செயலாளர்.

இல. 170, மடபாத்த வீதி
பிலியந்தலை.

9-238

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஷெலொம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
*பதிவு இலக்கம்* : பீவீ 107499
*பதிவு அலுவலகம்* : இல. 555டீ, காலி வீதி, கல்கிசை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 06.08.2015

*கம்பனியின் பெயர்* : டி என் எல் இன்டர்நெஷனல் ட்ரேடிங் (பீவீரீ) எல்ரீடீ

*பதிவு இலக்கம்* : பீவீ 106854
*பதிவு அலுவலகம்* : இல. 15சீ/3, ஹரமானிஸ் ஒழுங்கை, அத்திடிய, தெஹிவளை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 08.07.2015

9-241/1

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஹொஸ்பிட்டல் என்ட் ஹோம் கெயார் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 60271
*பதிவு அலுவலகம்* : இல. 372, காலி வீதி, கொழும்பு 3
*கம்பனியின் புதிய பெயர்* : எல். டபிள்யு. மெடிகெயா சேர்விசெஸ் (பீவீ) எல்ரீடீ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ் அட்வைசரி
சேர்விசெஸ் (பீவீ) எல்ரீடீ-பீவீ 259,
கம்பனிச் செயலாளர்கள்.

9-241/2

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எஸ். ஏ. ரீ. இம்பெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 106846
*கூட்டிணைப்புத் திகதி* : 08.07.2015
*பதிவு முகவரி* : இல. 331ஏ, 2/1, முதலாம் மாடி, செட்டியார் தெரு, கொழும்பு 11

பணிப்பாளர்.

9-237

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வாஸ் கன்சல்டேஷன்ஸ் (பீவீ) எல்ரீடீ
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 104121
*கம்பனி ஒருங்கிணைக்கப்பட்ட திகதி* : 2015, சனவரி 26
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10

9-169

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஏ. வீ. எச். டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பீவீ) எல்ரீடீ
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 106886
*கம்பனி ஒருங்கிணைக்கப்பட்ட திகதி* : 2015, யூலை 9
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10

9-170

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வாஸ் லெஷர் (பீவீ) எல்ரீடீ
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 106079
*கம்பனி ஒருங்கிணைக்கப்பட்ட திகதி* : 2015, யூன் 5
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10

9-171

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அவுஸ்திரேலியா, vic3029, தோமஸ் கார் டிரைவ், இல. 50 இல் தற்போது வசிக்கும் களுத்துறை மாவட்டம், வாத்துவ, வசந்தாராம றோட், இல. 12/20 ஐச் சேர்ந்த கிரிகங்காணம்கே பனூஜா ஸ்ரீதர்சன பெரேரா ஆகிய நான், விக்டோரியாவுக்காக கௌரவ சமாதான நீதவான், மே./பா., வில்லியம் வீதி, லெவல் 10/23, மெல்பேர்ன் ஐச் சேர்ந்த ரோனல்ட் பேய்லே இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட களுத்துறை மாவட்டம், வாத்துவை வசந்தாராம றோட், இல. 12/20 ஐச் சேர்ந்த கிரிகங்காணம்கே துசித்த பிரியதர்ஷனி பெரேராவுக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் இரத்துச்செய்து, இல்லாதொழிக்கிறேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். அத்துடன் மேற்படி அற்றோணித் தத்துவப் பத்திரத்தினூடாக மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் இனிமேல் நான் பொறுப்பாக மாட்டேன்

கிரிகங்காணம்கே பனூஜா ஸ்ரீதர்சன பெரேரா.

9-302

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ரீ-அவேக்னிங் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 107482
பதிவு முகவரி : இல. 7/9, 2 ஆவது லேன், நாவல, ராஜகிரிய
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 3.8.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-130

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொடை, உடஹாமுல்ல, புகையிரத நிலைய முதலாவது ஒழுங்கை, 6 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த அண்ட்ரியா மாரி வருணி பொகெல் திருமணத்திற்கு முன்னர் திஸ்ஸ வீரசிங்ஹ (585983314V ஆம் இலக்கமுடைய தேசிய ஆள் அடையாள அட்டையின் உரிமையாளர்) ஆகிய நான் நுகேகொட, உடகஹமுல்ல புகையிரத நிலைய முதலாவது ஒழுங்கை, 6 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ரடொல்ப் ஜேகப் பொகெல் (என்எக்ஸ்கேபீபி84பி4 ஆம் இலக்கமுடைய ஒல்லாந்து கடவுச்சீட்டின் உரிமையாளர்) ஆகிய எனது சட்டபூர்வமான அற்றோணித் தத்துவக்காரருக்கு வழங்கப்பட்ட பின்வரும் இரண்டு அற்றோணித் தத்துவங்களையும் உடனடியாக செயல்வலுப் பெறும் வகையில் இல்லாதொழித்து இரத்துச்செய்துள்ளேன் என அனைவருக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு தீப்தி ஹிக்கடுவே லியனகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1987.06.19 ஆந் திகதியையும் 1713 ஆம் இலக்கத்தையுடையதும் 189 ஆம் தொகுதி 68 ஆம் பக்கத்தில் நாட்புத்தக இல. 4784 இன்கீழ் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவம், சட்டத்தரணிகளும் மற்றும் பிரசித்த நொத்தாரிசுகளுமான டி. என். துரைராஜா அன்ட் கம்பனியால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1990.07.12 ஆந் திகதியையும் 2805 ஆம் இலக்கத்தையுடையதும் 158 ஆம் தொகுதி 106 ஆம் பக்கத்தில் நாட்புத்தக இல. 8132 இன்கீழ் பதிவாளர் நாயக திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவம்.

அண்ட்ரியா மாரி வருணி பொகெல்
திருமணத்திற்கு முன்னர் திஸ்ஸ வீரசிங்ஹ.

9-318

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பண்டாரவளை, பதுளை வீதி, இல. 471 இல் வசிக்கும் ஆள் அடையாள அட்டை இல. 741024543V இற்கு உரிய நவரத்னம் ரவிக்குமார் ஆகிய என்னால் மேற்குறிப்பிட்ட குடியரசில் பண்டாரவளை, பதுளை வீதி, இல. 471 இல் வசிக்கும் ஆள் அடையாள அட்டை இல. 773481644X ஆம் இலக்கத்திற்கு உரிய நவரத்னம் வசந்தகுமார் என்பவரின் பெயரில் பண்டாரவளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பாரிந்த மனோஜ் வீரசிங்க என்பவரால் 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 6 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2137 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தை இன்றைய தினத்தி லிருந்து இரத்துச்செய்து அதிகாரமற்றதாகவும் செயலிழந்ததாகவும் செல்லுபடியற்றதாகவும் செய்கின்றேன் என்பதை மேற்படி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இதன் வாயிலாக அறிவித்துக் கொள்கின்றேன்.

நவரத்னம் ரவிக்குமார்.

9-184

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, இலக்கம் 113/1, பூர்வாராம வீதி, கொழும்பு 5 ஐச் சேர்ந்த நிரஞ்சன் சுஜித் மாணிக்கவாசகர் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 780350768V ஆகிய நான், இதே முகவரியைச் சேர்ந்த பெனடிக் மாணிக்கவாசகர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 397680987V அவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 7 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் தவநேசன் அவர்களால் 8984 ஆம் இலக்கத்தில் முடித்து வழங்கிய விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இத்தால் இரத்துச்செய்கின்றேன். 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதிக்கு பின் நடைபெறும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பு இல்லை என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிரஞ்சன் சுஜித் மாணிக்கவாசகர்.

9-231

## பகிரங்க அறிவித்ததல்

ஓரியன்ட் பினான்ஸ் (ஓபீஎல்) பீஎல்சீ நிறுவனத்துடன், பார்லீட் பினான்ஸ் பீஎல்சீ (பீஎப்எல்) நிறுவனம், கம்பனிகள் சட்டத்தின் VIII ஆம் பகுதியின் ஏற்பாடுகளுக்கு அமைய, ஒன்றிணைக்கப்பட்டதை அடுத்து, அன்றைய தினத்திலிருந்து, பார்லீட் பினான்ஸ் பீஎல்சீ என அது தொடர்ந்து குறிப்பிடப்பட்டு செயற்படும் என்று, 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கக் கம்பனிகள் 244(1)(அ) ஆம் பிரிவின்கீழான ஒன்றிணைப்புச் சான்றிதழை கம்பனிகள் பதிவாளர் நாயகம் 2015, யூலை 16 ஆந் திகதியன்று வழங்கி உறுதிப்படுத்தியுள்ளார்.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 245 ஆம் பிரிவின் பிரகாரம், முன்குறிப்பிட்ட ஒன்றிணைப்புச் சான்றிதழின் அதிகார நிறைவேற்றம் என்பது, ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் (பீஎப்எல்) ஏனைய விடயங்கள் உட்பட கீழ்க்காணும் சகல விடயங்களுக்கும் பொறுப்பாக 2015, யூலை 16 ஆந் திகதியிலிருந்து வந்துள்ளது என்பதாகும் :

(அ) ஒன்றிணைக்கப்படும் கம்பனியின் (ஓஎப்எல்) சொத்துக்களுக்கான சகல உரிமைகள், அதிகாரங்கள் மற்றும்
(ஆ) ஒன்றிணைக்கப்படும் கம்பனியின் (ஓஎப்எல்) சகல பொறுப்புக்களும் கடப்பாடுகளும்,

இதன் அடிப்படையில் ஓரியன்ட் பினான்ஸ் (ஓபீஎல்) பீஎல்சீ உடன் செய்துகொள்ளப்பட்ட சகல குத்தகைகளும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் கடன் பத்திரங்களும் சட்டபூர்வமான

ஒப்பந்தங்களும் பார்லீட் பினான்ஸ் பீஎல்சீ உடன் ஒன்றிணைக்கப்பட்ட திகதியான 2015, யூலை 16 ஆந் திகதியிலிருந்து அதனுடன் சட்டபூர்வ பதிவுபெற்றவையாகக் கருதப்படும்.

ஓரியன்ட் பினான்ஸ் (ஓபீஎல்) பீஎல்சீ உடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்கள், வைப்புப் பணம் செலுத்தியோர் மற்றும் ஏனையோர் ஓரியன்ட் பினான்ஸ் (ஓபீஎல்) பீஎல்சீ உடனான எஞ்சியுள்ள சகல பொறுப்புக்களும் பார்லீட் பினான்ஸ் பீஎல்சீ இனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்க்கப்படும் என்று உறுதியாகத் தெரிவிக்கப் படுகின்றனர்.

பணிப்பாளர்,
பாட்லீட் பினான்ஸ் பீஎல்சீ.

9-293

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் நிறுவனங்கள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| நிறுவனத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுசெய்யப் பட்ட முகவரி |
|---|---|---|
| எம் ஜீ வென்சர் ட்ரெவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 105162 | இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| நோட்டன்பிறிஜ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 106537 | இல. 465, காலி வீதி, கொழும்பு 3 |
| கெட்மோர் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 106879 | செக்ரிடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| ப்ரோகிரெசிவ் ரியல் எஸ்டேட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 107197 | இல. 52-2/1, லோறன்ஸ் வீதி, கொழும்பு 4 |
| கம்பலன்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 107191 | செக்ரிடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| கெடபுல்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 107300 | இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |
| இன்சிடு (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 107371 | செக்ரிடேரியல் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனிச் செயலாளர்கள், இல. 10, ஹவ்லொக் பிளேஸ், கொழும்பு 5 |

செக்ரிடேரியல் ஹவுஸ் அட்வைஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 10, ஹவ்லொக் பிளேஸ்,
கொழும்பு 5.

9-134

---

## ஏல விற்பனைகள்

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்), சியனே கோறளை, அதிகாரி பற்று, பியகமை-தெல்கொடை பிரதேச சபை எல்லைகளுக்குள், பியகமை பிரதேச செயலாளர் பிரிவிற்குள், 271ஏ-சப்புகஸ்கந்தை கிராம அலுவலர் பிரிவினுள் மாக்கொலை தெற்கில் அமைந்துள்ளதும் பட்டலந்தை வீதி, வரிமதிப்பு இல. 22ஏ ஐக் கொண்டதும் ''திவுலகஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். சீ. எப்பாசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010, ஏப்பிறல் 4 ஆந் திகதியிடப் பட்ட வரைபட இல. 1107 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 13.27பே.)**

*(கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான மாகலகே நந்தசிறி, பிரசித்த நொத்தாரிசு எம். கே. சூரியஆரச்சி அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு 2014, யூன் 10 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 324 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)*

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.-** கொழும்பிலிருந்து கொழும்பு-கண்டி வீதி வழியே கிரிபத்கொடை சந்திவரை ஏறக்குறைய 11 கிலோ மீற்றர் தூரம் சென்று, மாக்கொலை வீதிக்கு வலப்பக்கம் திரும்பி, மாக்கொலை பசாரில் மாக்கொலை வை சந்திவரை ஏறக்குறைய 2.3 கிலோ மீற்றர் தூரம் சென்று பமுனுவில வீதிக்கு வலப்பக்கம் திரும்பி,

ஏறக்குறைய 350 மீற்றர் சென்று பட்டலந்த வீதிக்கு (30 அடி அகல தாரிடப்பட்ட பிரதேச சபை வீதி) இடப்பக்கம் திரும்பி, சொல்லப்பட்ட வீதிக்கு முகமிட்டு வலப்பக்கத்தில் அமைந்துள்ள விசாக்கா மகளிர் பாடசாலை மைதானத்திற்கு இட்டுச்செல்லும் வீதியில் அமைந்துள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 125 மீற்றர் தூரம் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2015, ஒற்றோபர் 6 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2015.08.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்" "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) விளம்பரச் செலவுக் கட்டணங்கள் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணங்கள் ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா அத்துடன் விற்பனையில் உறப்பட்ட வேறேதேனும் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐ (பத்து வீதம்) தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., முகாமையாளர்-அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667237, 011-4667230, 011-4667229.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. : 011-3068185, 0714 177199
தொலைநகல் இல. : 011-2572940.

9-255

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – வாத்துவ கிளை**

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

கடன் எடுத்த முனிதுங்க ரணவீர ஆராச்சிகே சுமிந்த ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பி. வீ. என். டபிள்யு. பெரேரா 2014.08.25 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 4622 இன் மூலம் செலுத்தவேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் மற்றும் மிகுதித் தொகையையும் வட்டியும் ஏலதாரரின் சொல்லப்பட்ட பணத்தொகைகளும் மற்றும் கொடுப்பனவுகளும் சேர்த்து பெற்றுக் கொள்வதற்காக இதன்கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பகிரங்க ஏலம் மூலம் 2015, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு விற்கப்படும்.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தல்பிட்டி தெபத்த பாணந்துறை தொட்டமுன பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவு, பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தல்பிட்டிபத்த உப அலுவலகப் பிரிவு 694, இம்புலிஹ கிராம அலுவலர் பிரிவு, பமுனுகம- அலுபோமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள தெல்கஹவத்த என்றழைக் கப்படும் காணி நில அளவையாளர் எஸ். பி. அபேசிங்க 2011.07.10 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2320 இல் காண்பிக்கப்பட்ட லொட் 4. இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 36.55பே. மற்றும் இக்காணியிலுள்ள கட்டிடங்கள், மரங்கள் அனைத்தும் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்கு**.- 2015.07.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியையும், 2015.09.28 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்**.- காலி வீதி ஊடாக திப்பத்த வீதி, பண்டாரகம வீதி அல்லது காலி வீதி ஊடாக பாணந்துறை தனியார் பஸ் நிலையம் மற்றும் மணிக்கூண்டுச் சந்தியில் பண்டாரகம வீதியில் சென்று குரச சந்தியில் அலுபோமுல்ல பகுதியில் இருந்து பெஸ்ட் லைப் இண்டஸ்ட்ரி கட்டிடம் அருகில் இக்காணி முன்பாக அமைந்துள்ளது (வலது பக்கம்) கட்டிடம் அருகில் வீடு இலக்கம் 378.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்தத் தவறினால் 10% சதவீத முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

வேறு விபரங்களுக்காக.- சிரேஷ்ட முகாமையாளர், ஹற்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.
மின் அஞ்சல் : senaservice@sltnet.lk.

9-268

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 72186485

திரு. டீ. எஸ். ஜயதுங்க மற்றும் திருமதி ஜே. டீ. எஸ். ஜயதுங்க ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.07.24 ஆந் திகதிய 1925 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2015.07.10 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்" மற்றும் "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர் ரீ அன்ட் எச் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2015.09.26 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுள் கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 679/B, வலனா தெற்கில் பாணந்துறை தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டி தெபத்தயில் மினுவன்பிட்டியவில் அமைந்த "உல்தியவலகட" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. ஜே. பீ. மகோதரட்ன தயாரித்த 1947, நவெம்பர் 09 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 46இல் துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : வரைபடம் இல. 46 இல் துண்டு A உம் ; கிழக்கு : உல்தியவலகட ஓவிட்டயும் ; தெற்கு : வரைபடம் இல. 477 இல் 1 உம், துண்டு 3 உம் (ஒதுக்கப்பட்ட பாதை) ; மேற்கு : வரைபட இல. 46இல் துண்டு D உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 46 இன் படி இருபத்துமூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 23.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் F 526/139 இல் பதிவு செய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. அம்பேபிட்டிய தயாரித்த 1992, மாச்சு 20 ஆந் திகதியிட்ட அண்மைய வரைபடம் இல. 2571 இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு மினுவன்பிட்டியவில் அமைந்த "உல்தியவலகட" என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 2571இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : உல்தியவலகட அல்லது கஹடகஹவத்தையில் துண்டு A உம் ; கிழக்கு : உல்தியவலகடயும் ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. கருணாசேன கொஸ்தா தயாரித்த 1986, சனவரி 16 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 447 இல் விபரித்த உல்தியவலகட அல்லது கஹடகஹவத்தயில் துண்டு 1 மற்றும் துண்டு 3 உம் ; மேற்கு : உல்தியவலகட அல்லது கஹடகஹவத்தயில் துண்டு D உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2571 இன் படி இருபத்துமூன்று தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 23.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

#### இரண்டாம் அட்டவணை

மேற்குறிப்பிட்ட மினுவன்பிட்டியவில் அமைந்த "உல்தியவலகட" என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 46 இல் விபரித்த துண்டு 46 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : கொஸ்கஹவத்தயும் ; கிழக்கு : வரைபடம் இல. 46 இல் துண்டு A மற்றும் C உம் ; தெற்கு : தந்திரிமுல்லை வரை வீதியும் ; மேற்கு : வரைபடம் இல. 46 இல் துண்டு B உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 46 இன் படி ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் F 283/172 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட மினுவன்பிட்டியவில் அமைந்த "உல்தியவலகட" என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 477 இல் விபரித்த துண்டு 03 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : வரைபடம் இல. 477 இல் துண்டு 2 உம் ; கிழக்கு : வரைபடம் இல. 477 இல் துண்டு 1 உம் ; தெற்கு : தந்திரிமுல்லை வீதியும் ; மேற்கு : வரைபடம் இல. 46 இல் துண்டு D உம் (ஒதுக்கப்பட்ட பாதை) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 477 இன் படி ஒன்று தசம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 1.3பே.) விஸ்தீரணமுடையது. இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் F 283/173 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. என். டி. எல். புஷ்பகுமார,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பாணந்துறை.

9- 301

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.